4th February 1966]

புலவர் கா. கோவிந்தன் : இந்த ரூ. 25,000-ல் இப்பொழுது சர்க்கார் 50 சத விகிதம் கொடுக்கிறது. அதை 75 சத விகிதமாகக் கொடுப்பதற்கு அரசாங்கத்தில் யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அது எந்த நேரத்தில் அமலுக்கு வரும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரையில் அவ்வாறு யோசனை ஒன்றும் இல்லை.

திரு. ம. கமலநாதன் : புதியதாக உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை துவக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி இன்னும் முடிவு செய்ய வில்லை.

Schools for the Blind, Deaf and Dumb

* 87 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any grants are given to the school for the Deaf and Dumb and the school for the Blind in Palayamcottai;

(*b*) whether any representations were made by the Schools' managements in this regard; and

(*c*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes, to the Director of Secondary Education.

(*c*) The Director has passed suitable orders on the representation.

திரு எம். எஸ். செல்வராஜன் : செவிடு, ஊமை, குருடு போன்ற குழந்தைப் பள்ளிக்கூடங்களுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மானேஜ்மெண்டின் நிதி நிலைமை என்ன ? எத்தனை ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள் ? எத்தனை மாணவர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள்? என்கிற கணக்குகளை எல்லாம் பார்த்து ஓரளவு நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளி

* 88 **கேள்வி.—திரு எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளியில், பாண்டிச்சேரி இலாகாவைச் சேர்ந்த கிராமப் பகுதி மாணவர்கள் மேற்படி பள்ளியில் சென்ற இரண்டு ஆண்டு காலமாக மாதச் சம்பளம் கட்டிக்கொண்டு படிக்கிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Tuition fees were collected for one year.